
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1131

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

51

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# கொடுமைகளுக்கு முடிவு தேடிய ‘ஒரே இரத்தம்!’

‘ஒரே இரத்தம்’ திரைப்படத்தின் கதா பாத்திரங்கள் வாயிலாகக் கலைஞர் தனது கொள்கைகளைப் பேச வைத்ததுடன், படத்தின் தொடக்கத்தில் தானே திரையில் தோன்றி, படம் குறித்துப் பேசவும் செய்கிறார்.

### நோக்கவுரை

“என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே, வணக்கம். குங்குமம் வார இதழில் நான் தொடர் கதையாக எழுதிய ‘ஒரே இரத்தம்’ திரை ஓவியமாகத் தீட்டப்பட்டு, உங்கள் விழிகளுக்கும் செவிகளுக்கும் விருந்தாக மட்டுமல்லாமல், சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் மூடநம்பிக்கை நோய்களுக்கு மருந்தாகவும் படைக்கப்பட்டிருக்கிறது.

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’, ‘பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்’, ‘சாதி இரண் டொழிய வேறில்லை’, ‘இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்’ என்று தொல் பழங்காலத்து தமிழ்ப்புலவர் பெருமக்களிலே யிருந்து ‘இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே’ என்ற ஏக்கத்தோடு கவிப்புயல் பாரதிதாசன் கவிதை பாடியுள்ள இந்த நூற்றாண்டு வரையில், சாதி என்னும் சங்கிலி, சமுதாயத்தின் காலில் இறுகி, பின்னிப்பிணைந்து, இழுத்து சமத்துவப் பாதையில் முன்னேற விடாமல் தடுத்தபடிதான் இருக்கிறது.

யாரோ எவரோ, சாதிகளை நால் வருணங் களாக உருவாக்கினார்கள் என்று குற்றம் சாட்டுகிற நாமே, நமக்குள்ளே ஆயிரம் சாதிப் பிரிவுகளை ஏற்படுத்திக்கொண்டு, ஒருவருக் கொருவர் அடித்துக்கொண்டு வீழ்கிறோம்.

கல்வி எனும் பலகணி திறக்கப்பட்டு, அறிவு மனம் பரவிடாத கிராமப்புறங்களில் மட்டுமல்ல, நவீன விஞ்ஞானக் கல்வி முறைகளும் நாகரிகமும் நடைபயில்கின்ற நகர்ப்புறங்களிலேகூட சாதிக் கலவரங்களைத் தவிர்க்க முடியவில்லை. கிராமப்புறமான கீழ்வெண்மணி நிகழ்ச்சியும் நகர்ப்புறமான விழுப்புரம் நிகழ்ச்சியும் நினைத்துக்கூட பார்க்கமுடியாத கொடுமைகள் அல்லவா? அறிவுஜோதி கொளுத்துகின்ற கல்லூரிகளில் மாணவர்களுக்கிடையில்கூட சாதிக் கலவரங்கள் எனும் அலங்கோலங்கள் இன்னமும் காணப்படு கின்றனவே?

இந்த நிலையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட கதை, எடுக்கப்பட்டுள்ள படம் தான், ஒரே இரத்தம்” என்று கலைஞர் பேசுவதுடன் படம் தொடங்குகிறது. இவ்வாறு ஒரே இரத்தம் திரைப்படத்திற்கு கதை-திரைக்கதை-வசனம் எழுதியதற்கான தனது நோக்கத்தை மிகவும் வெளிப்படையாகவே கலைஞர் சொல்லிவிடுகிறார்.

### மதம் விட்டு மதம்

அடுத்து, படத்தின் தொடக்கக் காட்சியில், கல்லூரியில் நாயகன் (கார்த்திக்) மகேசிடம் மேரி தனது காதலை வெளிப்படுத்துகிறாள். அதற்கு மகேஷ், தன் தந்தையின் சாதிவெறியைப் பற்றி மேரியிடம் எடுத்துச் சொல்கிறான்...

**மகேஷ்:** “மேரி உன் மனசு எனக்குப் புரியுது. ஆனால், எங்கப்பாவைப் பத்தி உனக்குத் தெரியாது.”

**மேரி:** “ஏன் தெரியாது? உங்க அப்பா, உங்க அம்மா, உங்க தங்கச்சி காமாட்சி எல்லோரையும் நல்லாத் தெரியுமே.”

**மகேஷ்:** “அவங்களத் தெரியும். ஆனா எங்க அப்பா? சனாதன சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தி. வைதீகபுரியின் வேந்தர். ஆச்சார அனுஷ்டானங்கள் ஓர் அணு அளவு தவறினாலும், எரிமலையாக ஆகிடுவார்.





பூகம்பமாய் வெடிப்பார்.”

**மேரி:** “அப்படின்னா?”



**மகேஷ்:** “சாதி விட்டு சாதி கல்யாணம் பண்ணிக்கிறதுக்கே அவர் சம்மதிக்க மாட்டார். மதம் விட்டு மதமா சம்மதிக்கப்போறாரு? ஒரு சம்பவம் சொல்றேன் கேளு. ஒரு தடவை எங்க வீட்டு பொமரேனியன் நாயும் எதிர் வீட்டு நாட்டு நாயும் விளையாடிகிட்டு இருந்தது. அதைப் பார்த்த எங்கப்பா என்ன செஞ்சாரு தெரியுமா? (பண்ணையார் பரமசிவம் துப்பாக்கியால் நாய்களைச் சுட்டுக் கொல்லும் காட்சி காட்டப்படுகிறது)

இப்படி இந்த 20-ஆம் நூற்றாண்டிலே ஒரு அதிசய மனிதர் எங்கப்பா. நாய்களுக்கே சாதி பேதம் பார்க்கிறவரு, நம்மள விடுவாரா?” என்று கேட்கிறான்.

இவ்வாறு மகேஷ் பேசும் வசனங்கள் மூலம் பண்ணையார் பரமசிவம் (கிஷ்மு) பற்றிய ஒரு சித்திரத்தைப் பார்வையாளர்களுக்குக் கலைஞர் ஏற்படுத்திவிடுகிறார்.

### குண வேறுபாடுகள்

மேலும், காமாட்சியைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வரும் காட்சியில் இன்னும் தெளிவுபடுத்துகிறார். மாப்பிள்ளையின் தகப்பனார், பண்ணையார் பரமசிவத்திடம் ஒரு கேள்வி கேட்கிறார்...

**மாப்பிள்ளையின் தகப்பனார்:** “பண்ணை யார்வாள் எனக்கொரு சந்தேகம்.”

**பண்ணையார்:** “என்ன சந்தேகம்?”

**மாப்பிள்ளையின் தகப்பனார்:** “வீடு முழுக்க எல்லா சாமி படத்தையும் வச்சிருக்கீங்க, ஆனா, முருகன் படத்தைக் காணோமே?”

**பண்ணையார்:** “கரெக்ட். முருகன் வள்ளி யைக் கல்யாணம் பண்ணிக்கிட்டான் இல்லையா... வள்ளி என்ன சாதி?”

**மாப்பிள்ளையின் தகப்பனார்:** “குறத்தி.”

**பண்ணையார்:** “ம்... ஆண்டவனாயிருந்தாலும் சாதி விட்டு சாதி கல்யாணம் பண்ணுன அவனுக்கு, என் வீட்டுல இடமில்லை.”

**மாப்பிள்ளையின் தகப்பனார்:** “என்னதான் இருந்தாலும் முருகன் சாமியாச்சே ?”

**பண்ணையார்:** “யாராயிருந்தாலும் சரி, எனக்குன்னு ஒரு கொள்கையுண்டு. பிரளயமே வந்தாலும், அதை நான் மாத்திக்க மாட்டேன்.”

**வெங்கண்ணா:** “ஆமா சார். எங்க பண்ணையார்வாள் ரொம்ப ஆர்த்தடாக்ஸ். என்னயே எடுத்துக்கோங்களேன். நானும் ஒரு சனாதனவாதியா இருந்தாலும் என் பையன் அமெரிக்காவுல வேலை பார்க்குறான். அங்கே ஒரு நீக்ரோ பெண்ணை லவ் பண்றேன்னு லட்டர் போட்டான்.

ஓகே. அவளையே கல்யாணம் பண்ணிண்டு அங்கேயே செட்டிலா யிடுன்னு நானும் பதில் லட்டர் போட்டுட்டேன். ஏன் தெரியுமோ... அந்த நீக்ரோ பெண் பெரிய பணக் காரியாம். அதையேன் விடுவானேன் னுங்கிறேன்?” என்று சொல்கிறார்.

இக்காட்சிக்குக் கலைஞர் எழுதியுள்ள வசனத்தின் மூலம் பல்வேறு விசயங்களை மிக நுணுக்கமாக நமக்குப் புரியவைக்கிறார். வெங்கட்ராம ஐயர் தனது சனாதனக் கொள்கையைத் தமது சுய லாபத்திற்காக / பணத்திற்காக எத்தனை எளிதாக மாற்றிக் கொண்டு சுக வாழ்வு வாழ்கிறார் என்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.

அதாவது, பார்ப்பனர்களுக்கும் பார்ப்பன ரல்லாத மக்களுக்கும் இடையிலான குண வேறுபாட்டையும், பார்ப்பனரல்லாதார் தாம் கொண்ட மூடக்கொள்கைக்காகத் தம்மையும் தம் குடும்பத்தாரையும் வருத்திக்கொள்ளத் தயங்காதவர்கள் என்பதையும் கலைஞர் போகிற போக்கில், ஒரு சிறு காட்சிக்குத் தாம் எழுதிய வசனத்தின் மூலம் படம் பிடித்துக் காட்டிவிடுகிறார்.

பண்ணையார் மகள் காமாட்சியின் வாழ்விலும் சில சம்பவங்கள் நிகழ்கின்றன. தன் தந்தை வரதட்சனை கொடுக்க மாட்டேன் என்று கூறுவதால், காமாட்சிக்குத் திருமணம் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கிறது. ஒரு கட்டத்தில், அவள் தன் வீட்டில் பண்ணை வேலை செய்யும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பொன்னனிடம் காதல் வயப்பட்டு, அதனால் காமாட்சி கர்ப்பம் தரிக்கிறாள்.

மகள் கர்ப்பம் தரித்திருப்பதை அறியும் பார்வதி அம்மாள், வேறு வழியின்றி, ஜோதிடர் வெங்கட்ராமன் ஐயருடன் சேர்ந்து காமாட்சிக்கு ஜாதகம், கிரகம் சரியில்லை என்று கூறி காமாட்சியை அவளது பாட்டி ஊருக்கு அனுப்பி, அங்கேயே பிரசவம் பார்த்து, அந்தக் குழந்தையை ‘இது தெய்வக் குழந்தை, நீங்கள் வளர்க்க வேண்டும் என உங்கள் ஜாதகம் சொல்கிறது’ என்று பண்ணையாரிடம் அவரது மூடநம்பிக்கையைப் பயன்படுத்தி வீட்டுக்குக் கொண்டு வந்து வளர்க்கிறார்கள். இறுதியில், இந்த உண்மையும் பண்ணையாருக்குத் தெரிய வரும். இப்படிப் படம் முழுவதும் சாதிப் பெருமை, வர்ண தர்மம், ஆச்சாரம் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கும் படமாக ‘ஒரே இரத்தம்’ இருந்தது.

> “படம் முழுவதும் சாதிப் பெருமை, வர்ண தர்மம், ஆச்சாரம் எல்லாவற்றையும் அடித்துநொறுக்கும் படமாக ‘ஒரே இரத்தம்’ இருந்தது.”

...காட்சி விரியும்

## நிதிச்சுமையை ஏற்படுத்தும் மோடியின் பயணம்!

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக, தமிழ்நாட்டுக்கு ஆறு முறை வருகை தந்த பிரதமர் மோடி, அதன் பிறகு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக மீண்டும் வரத்தொடங்கியுள்ளார். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, எந்த மாநிலத்தில் தேர்தல் நடந்தாலும், தேர்தல் காலத்தில் மட்டும் அம்மாநிலங்களுக்கு அதிக முறை பயணம்செய்வதை பிரதமர் மோடி வழக்கமாகக் கொண்டுள்ளார். தேர்தல் நலனுக்காக இவ்வாறு அதிக முறை மோடி பயணம் செய்யும்போது, பொது நிதியில் இருந்து பல கோடி ரூபாய் செலவாகிறது என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரிய வருகிறது.

குறிப்பாக, கர்நாடகாவில் 2023 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, சில மாதங்களிலேயே அடுத்தடுத்து பல முறை அம்மாநிலத்திற்கு பிரதமர் மோடி சென்றார். 2023, பிப்ரவரி 27 அன்று, மோடி கர்நாடகாவிற்குப் பயணம் மேற்கொண்ட ஒரு நாளில் மட்டும் 33 கோடி ரூபாய் பொது நிதி செலவிடப்பட்டுள்ளது. லஞ்சமுக்த கர்நாடகா அமைப்பைச் சேர்ந்த மஞ்சுநாத் ஹிரேசௌட்டி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் எழுப்பிய கேள்விகளுக்கு இப்போது பதில் கிடைத்துள்ளது.

அன்றைய தினம் ஷிவமோகா விமான நிலையத்தை மோடி திறந்துவைத்தார். இந்த நிகழ்ச்சிக்காக மட்டும் 18.81 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அடுத்து, பிரச்சாரக் கூட்டங்களிலும் வேறு நிகழ்ச்சிகளிலும் மோடி கலந்துகொண்டார். அந்த நிகழ்ச்சிகளுக்காகப் பேருந்துகளில் மக்களை அழைத்து வர, 4.11 கோடி ரூபாயும் பிரமாண்ட பந்தல், மேடை அமைக்க 1.8 கோடி ரூபாயும், விமானப் பயணம், ரோடு ஷோ செலவுகளுக்கு, 14.35 கோடி ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.

அப்போது அங்கு பா.ஜ.க. ஆட்சியில் இருந்ததால், அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த சி.சி. பாட்டீலிடம் இது குறித்து கேள்விகள் எழுப்பியதற்கு, ‘செலவினங்கள் சரியாக நினைவில் இல்லை’ என்று அலட்சியமாகப் பதிலளித்துள்ளார். பிரதமர் மோடியின் இத்தகைய பயணத்திற்குப் பிறகே, பெரும்பாலும் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வருவதால், இத்தகைய செலவினங்களுக்குக் கட்டுப்பாடும் இருப்பதில்லை. ஒருவேளை கட்டுப்பாடுகள் இருந்தாலும், பா.ஜ.க. அதைப் பற்றிக் கவலைப்படுவதும் இல்லை.

## ப்ளாஷ்பேக்



### கல்லூரிக் காலத்தில் தலைவரின் வாழ்த்து!



எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

2007-ஆம் ஆண்டு, ‘அனார்கலியின் காதல்’ என்கிற திரைப்படத்தின் சிறப்புக் காட்சிக்கு, அன்றைய முதலமைச்சர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது, மருத்துவம் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்த நான், என் தந்தையுடன் அந்தச் சிறப்புக் காட்சிக்குச் சென்றிருந்தேன். என் தந்தையார் தலைவரை நலம் விசாரிக்கையில், என்னிடம் “என்ன படிக்கிற?” என்று கேட்ட தலைவர் அவர்கள், ‘நன்றாகப் படிக்கவும்’ என வாழ்த்தினார். கல்லூரிக் காலத்திலேயே தலைவரைக் கண்ட மகிழ்ச்சியும் உற்சாகமும் கழகப் பற்றினை என்றென்றும் பற்றி நிற்பதற்குச் சான்றாகும்.

**- மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா, மாநிலச் செய்தித்தொடர்பு துணைச் செயலாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பரபரப்பான அரசியல் களம்

1956-ஆம் ஆண்டு, திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில்தான், கழகம் தேர்தலில் நிற்க முடிவு செய்தது. தீர்மானமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற பின்னர், இது குறித்து முறையான அறிவிப்பை அன்றைய பொதுச் செயலாளர் நாவலர் வெளியிட்டபோது, எழுந்த ஆரவாரம், கரவொலி அடங்க 10 நிமிடங்களுக்கு மேல் ஆனது. ‘கழகம் தேர்தலில் ஈடுபடும்’ என்கிற முடிவு, அரசியல் களத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131